# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Website : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ. தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல் முறையீட்டு மனு எண்.67/2015**

திரு. S. முத்துசாமி,
32, R.K.K. நகர்,
நீலிகோணாம் பாளையம் அஞ்சல்,
கோயம்புத்தூர் – 641 033 . . . மேல்முறையீட்டாளர்

எதிர்

2) மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். சாலை, ஈரோடு – 9 . . . எதிர்மனுதாரர்

**ஆணை நாள் 25–9–2015**

1. திரு. S. முத்துசாமி R.K.K. நீலிகோணாம் பாளையம், கோயம்புத்தூர் அவர்களால் ஈரோடு மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் தீர்வுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட அவரின் 13–8–2015 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.67/2015 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேல்முறையீட்டாளர் அவரது முன் அனுமதியின்றி அவரது பூமியின் மீது கொண்டுசெல்லப்பட்டுள்ள சர்வீஸ் வயரை Rule 27(6) of TNERC Distribution Code 2006 and Rule 3(a) of works of license Rule 2006இன்படி அகற்றி கொள்ளவேண்டும் என்றும், அதற்கு உண்டான முழுச் செலவு தொகையையும் அவரது அண்ணார் திரு. கல்யாணசுந்தரமே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட மேல்முறையீட்டு மனுவின் நகல் மேற்பார்வை பொறியாளர்/ஈரோடு மின்பகிர்மான வட்டம் அவர்களுக்கு இசைவிணக்கம்எதுவும் ஏற்படவில்லை என்றால் பதிலுரையை சமர்ப்பிக்க வேண்டும் என்று 20.8.2015 நாளிட்ட மின்குறைதீர்ப்பாளர் கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மேற்பார்வை பொறியாளர்/ஈரோடு மின்பகிர்மான வட்டம் அவர்கள் தன்னுடைய 14.9.2015 நாளிட்ட கடிதத்தில் 10.9.2015 அன்று மாலை 4.00 மணி அளவில் நடத்தப்பட்ட இசைவிணக்க கூட்டத்தில் மேல்முறையீட்டாளர் திரு. S. முத்துசாமி அவர்களும் அவரது தமையனார் திரு. S. கல்யாண சுந்தரம் அவர்களும் கலந்துகொண்டனர் என்றும் திரு. S. முத்துசாமி அவர்கள் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் இறுதி தீர்வை ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்து கடிதம் அளித்துள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

5. மேலும், திரு. S. கல்யாணசுந்தரம் அவர்களும் மன்றத்தின் உத்தரவில் குறிப்பிட்டது போல் மின்பாதையை மாற்றி அமைப்பதற்கு உரிய மதிப்பீட்டு தொகையில் பாதித் தொகையை செலுத்த சம்மதம் என்று தன்னுடைய 10.9.2015 நாளிட்ட கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார் என்று தெரிவித்து அந்த கடிதத்தையும் அசலாக சமர்ப்பித்துள்ளார்.

6. மேல்முறையீட்டாளர் திரு. S. முத்துசாமி அவர்கள் மன்றத்தின் இறுதி தீர்வை ஏற்றுக் கொள்வதாக 10.9.2015 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளதாக மேற்பார்வை பொறியாளர்/ஈரோடு மின்பகிர்மான வட்டம் தெரிவித்துள்ளதால் அந்த 10.9.2015 நாளிட்ட கடிதம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"From*
*S. முத்துசாமி,*
*52, R.K.K. நகர்,*
*நீலிக்கோணாம்பாளையம் (PO),*
*கோயமுத்தூர் 641 033.*

*To*
*கண்காணிப்பு பொறியாளர் அவர்கள்,*
*தமிழ்நாடு மின்சார வாரியம்,*
*ஈரோடு.*

*ஐயா,*

*நான் தமிழ்நாடு மின் குறைதீர்ப்பாளர் அவர்களுக்கு ஓர் மேல்முறையீடு செய்து இருந்தேன். (Vide Electricity Ombudsman's Letter No/TNEO/Petition No.67/2015/ D.No.1069/ 2015,dt. **20.8.2015)** இது சம்பந்தமாக இசைவிணக்கம் மூலம் தீர்வு காண இன்று **10.9.2015** என்னை அழைத்து என்னிடம் விசாரித்தீர்கள் மேலும், எனக்கு சில விளக்கங்களும் அளித்தீர்கள்.*

*நான் ஈரோடு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் எனக்கு அளித்த **17.7.2015** தேதியிட்ட இறுதி உத்தரவை ஏற்றுக் கொள்கிறேன்.*

*இப்படிக்கு*
*ஒப்பம் / xxx xxx*
*(S. முத்துசாமி)*

*ஈரோடு*
***10.9.2015**"*

7. மேற்கண்ட கடிதத்தில் மேல்முறையீட்டாளர் ஈரோடு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் அவருக்கு அளித்த 17.7.2015 தேதியிட்ட இறுதி உத்தரவை ஏற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதால் அவருக்கு மன்றத்தின் தீர்வின் மீது மேல்முறையீடு செய்ய காரணம் எதுவும் இல்லை என்று ஆகிவிடுகிறது. எனவே, மேல்முறையீட்டு மனு எண்.67/2015 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்

**1)** திரு. S. முத்துசாமி,
32, R.K.K. நகர்,
நீலிகோணாம் பாளையம் அஞ்சல்,
கோயம்புத்தூர் – 641 033

**2)** மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். சாலை,
ஈரோடு – 9

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
ஈரோடு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, ஈ.வி.என். சாலை,
ஈரோடு – 9

4) தலைவர்  மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5)  செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6)  உதவி இயக்குநர் (கணினி)  –    <u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி  லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.